**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 64** **நாள்: 10.05.2018**

# பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் உள்ள குளங்கள் மற்றும் ஏரிகள் புனரமைக்கும் பணி குறித்து ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ஆய்வுக்கூட்டம் இன்று நடைபெற்றது.

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் உள்ள குளங்கள் மற்றும் ஏரிகள் ஆகியவற்றை புனரமைக்கும் பணிகள் குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் வணிக பொது நிறுவனங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களுடனான (CSR) ஆய்வுக்கூட்டம் இன்று (10.05.2018) ரிப்பன் மாளிகையில் நடைபெற்றது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 206 குளம் மற்றும் ஏரிகள் உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. முதற்கட்டமாக சென்னை சீர்மிகு நகரம் நிதியின் கீழ் ரூ.5.85 கோடி மதிப்பீட்டில் 32 குளங்கள் மற்றும் ஏரிகளை புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்களால் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் ரூ.16.00 கோடி மதிப்பீட்டில் வில்லிவாக்கம் ஏரி புனரமைப்பு திட்டப்பணியை 09.05.2018 அன்று துவக்கி வைத்து, பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் உள்ள குளங்கள் மற்றும் ஏரிகள் ஆகியவற்றை புனரமைக்கும் பணிகளுக்காக வணிக பொது நிறுவனங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களுடன் ஆய்வுக்கூட்டம் நடத்துமாறு அறிவுறுத்தினார்.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியால் பல்வேறு நிதியின்கீழ் ரூ.5.95 கோடி மதிப்பீட்டில் 6 குளங்கள் மற்றும் ஏரிகளை புனரமைக்கும் பணிகள் தொடங்கப்படவுள்ளது.

சென்னை நதிகள் புனரமைப்பு நிறுவனம் (CRRT) மூலம் ரூ.25.29 கோடி மதிப்பீட்டில் மணலி மண்டலம், வார்டு–16, கடப்பாக்கம் ஏரி மற்றும் பெருங்குடி மண்டலம், வார்டு–191, நெசவாளர் நகர் ஏரி ஆகிய 2 ஏரிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரித்துள்ளது. கொசஸ்தலையாறு வடிநிலப் பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் பணியில், இவ்விடங்களில் வரும் 38 குளம் மற்றும் ஏரிகளை புனரமைக்கும் பணிக்கு ரூ.40.07 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கை கலந்தாலோசகரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற நிதி சேவை நிறுவனம் (TNUIFSL) நிறுவனம் மூலம் 24 குளங்கள் மற்றும் ஏரிகள் புனரமைப்பு பணி மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கை அளிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. மீதமுள்ள 104 குளங்கள் / ஏரிகளை புனரமைக்கும் பணிக்கு தற்போது TNUIFSL நிறுவனம் விரிவான திட்ட அறிக்கை அளிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் எல் & டி நிறுவனம் (Larsen & Toubro Ltd.), அசோக் லேய்லேண்டு நிறுவனம் (Ashok Leyland Ltd.), சிட்டி கனக்ட் அமைப்பு (City Connect), 100 நகரங்கள் மீண்டெழல் அமைப்பு (100 Resilient Cities), சி40 நகரங்கள் அமைப்பு (C40 Cities), காக்னிஸன்ட் தொழில்நுட்ப நிறுவனம் (Cognizant Tehnology Solutions), மெட்ராஸ் ரோட்டரி கிளப் (Rotary Club of Madras) உட்பட 20 வணிக பொது நிறுவனங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டு, 104 குளங்கள் மற்றும் ஏரிகளை புனரமைப்பதற்கான திட்ட அறிக்கை கிடைத்த பின், பணிகளை மேற்கொள்ள உறுதி அளித்தார்கள். மேற்கொண்டு தொண்டு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் குளம் மற்றும் ஏரிகளை புனரமைக்கும் பணிக்கு வரவேற்கப்படுகின்றனர் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில், துணை ஆணையாளர் (பணிகள்) திரு.எம்.கோவிந்த ராவ், இ.ஆ.ப., வட்டார துணை ஆணையாளர்கள் திருமதி எஸ்.திவ்யதர்ஷினி, இ.ஆ.ப., டாக்டர் சுபோத்குமார், இ.ஆ.ப., திரு.எஸ்.கோபால சுந்தர ராஜ், இ.ஆ.ப., உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**